 සියලු ම හිමිකම් ඇවිරිණි. / All Rights Reserved

# வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Provincial Department of Education - NWP

மூன்றாம் தவணைப் பரீட்சை - தரம் - 06 - 2023 (2024)
Third Term Test - Grade 06 - 2023 (2024)

## வரலாறு

நேரம்: 2 மணி.

சுட்டெண்:

### பகுதி I

- எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.
- 1 - 5 வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள இடைவெளிகளுக்கு பொருத்தமான விடைகளை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

1. பொலன்னறுவையிலுள்ள ................................ முதலாம் பராக்கிமபாகு மன்னனால் கட்டப்பட்டது.
   (சிவதேவாலயம் / கல் விகாரை / கண்டக சைத்திய)
2. இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன் மத்திய மெக்சிகோவில் ........................... முதன்முதலில் உற்பத்தி செய்யப்பட்டது.
   (சோளம் / நெல் / கோதுமை)
3. ஆற்றலுடைய மனிதன் என ................................ அழைக்கப்பட்டான்.
   (ஹோமோ இரெக்டஸ் / ஹோமோ ஹெபிலஸ் / ஹோமோ சேபியன்)
4. சிந்து நதி நாகரிகம் ................................ யை மையமாக கொண்டு எழுச்சி பெற்றதாகும்.
   (நைல் நதி / சிந்து நதி / கிருஸ்ணா நதி)
5. வலகம்பாகு மன்னனின் மனைவி ................................ தேவியாவாள்.
   (லீலாவதி / அனுலா / சோமா)

- 6 - 10 வரையான வினாக்களிலுள்ள கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் முன்னாலுள்ள அடைப்பினுள் இடுக.

6. உலகில் முதன்முதலாக தோன்றிய உயிரினம் கண்ணுக்குத் தெரியாத அளவிற்குச் சிறிய பக்டீரியாவாகும். ( )
7. முதன்முதலில் அச்சியந்திரத்தை உலகிற்கு அறிமுகப்படுத்திய மக்கள் சீனர்களேயாவர். ( )
8. புத்தரின் வலது தாடை எலும்பை வைத்து ருவன்வெலிசாயா கட்டப்பட்டுள்ளது. ( )
9. அநுராதபுரக்கால மக்கள் மகாசேன மன்னனை “மின்னேரிய தெய்வம்” எனப்போற்றினர். ( )
10. தாதுசேன மன்னன் தூபாராம தூபிக்கு வட்டதாகே மனை ஒன்றினை அமைத்தான். ( )

- 11 - 15 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள விடைகளுள் மிகச் சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

11. இந்நாட்டு வரலாற்றை அறிந்து கொள்ளக்கூடிய மிகப் புராதன இலக்கிய நூல் எது?
    i. தீபவம்சம் ii. மகாவம்சம் iii. தூபவம்சம் iv. போதி வம்சம்
12. எகிப்திய நாகரிகப் பிரதேசத்தை ஆட்சி செய்த அரச பரம்பரையினர் யார்?
    i. ஹரப்பா ii. ஹமுராபி iii. பாராவோ iv. கில்கமேஸ்
13. தமது சமய விழாக்களை கொண்டாடுவதற்காகக் காலத்தை அளவிட ஹிஜ்ரி ஆண்டைப் பயன்படுத்தும் சமயத்தவர்கள் யார்?
    i. இந்துக்கள் ii. முஸ்லிம்கள் iii. கத்தோலிக்கர் iv. பௌத்தர்கள்

14. உலக வரலாற்றில் விசாலமான செங்கல் தூபியாக விளங்கியது,

i. தூபாராம தூபி ii. ருவன் வெலிசாயா தூபி

iii. ஜேதவனாராமய தூபி iv. அபயகிரி

15. பின்வரும் மன்னர்களுள் பண்டுகாபய மன்னனுக்குப் பிறகு ஆட்சி செய்த அநுராதபுர மன்னன் யார்?

i. தேவநம்பிய திஸ்ஸன் ii. முட்டசிவன்

iii. வசபன் iv. மகாசேனன்

- **16 - 20 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான விடைகளை எழுதுக.**

16. இலங்கையில் வாழ்ந்ததாகக் குறிப்பிடும் குவேனி ……………………………. குலத்தை சேர்ந்த பெண் ஆவாள்.

17. துட்டைகைமுனு மன்னனால் கட்டப்பட்ட ருவன்வெலிசாயா தூபி ……………………………. எனவும் அழைக்கப்படும்.

18. இறந்த உடலை நீண்ட காலம் பேணி வைத்திருக்கக் கூடிய மம்மி முறையை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர்கள் ……………………………. நாகரிக மக்களாவர்.

19. தரைக்குக் கீழ் நீரை கொண்டு செல்லும் ……………………………. முறை வசப மன்னனின் பொறியியலாளர்களால் அறிமுகம் செய்யப்பட்டது.


20. பழங்கால மனிதர்கள் வாழ்ந்த மலைப் பிரதேசங்களில் அமைந்துள்ள சமவெளிகள் ……………………………. எனப்படும்.

(40 புள்ளிகள்)

## பகுதி II

- **முதலாம் வினா கட்டாயம்.**
- **முதலாம் வினா உட்பட 5 வினாக்களுக்கு விடையளிக்க.**

01. தரப்பட்டுள்ள உலகப்படத்தை அடிப்படையாக கொண்டு கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.





அ. i. உலகிற்கு வெடி மருந்தை அறிமுகப்படுத்திய நாடு A எனும் எழுத்தால் காட்டப்பட்டுள்ளது. இந்நாட்டை பெயரிடுக. (01 புள்ளி)

ii. அசோக மன்னன் ஆட்சி செய்த நாடு எந்த எழுத்தால் குறிக்கப்பட்டுள்ளது? (01 புள்ளி)

iii. ஹோமோ சேபியன் வாழ்ந்த கண்டங்கள் இரண்டு D மற்றும் G எழுத்தால் காட்டப்பட்டுள்ளது. அக் கண்டங்களைப் பெயரிடுக. (02 புள்ளி.)

(ஆ) i. A எனும் உருவில் காட்டப்பட்டுள்ள நிர்மாணிப்பு யாது?
ii. இந்நிர்மாணிப்பு எந்த நாகரிகத்திற்கு உட்பட்டது? (04 புள்ளி.)

A


(இ) i. B எனும் உருவில் காணப்படும் கட்டடம் யாது?
ii. இதனை கட்டிய மன்னன் யார்?
iii. இது அமைந்துள்ள இராச்சியம் எது?
iv. இதனை கட்டி எப்பிக்குவுக்கு தானம் செய்யப்பட்டது? (04 புள்ளி.)

B


(ஈ) i. C எனும் உருவிலுள்ளது யாது? (01 புள்ளி)
ii. இதனை எக்காலத்திற்குரிய மனிதனால் கட்டப்பட்டுள்ளது? (01 புள்ளி)
iii. இதை கட்டப் பயன்படுத்திய பொருட்கள் 2 குறிப்பிடுக? (02 புள்ளி.)

(16 புள்ளி.)

C


02. (i) வரலாற்றைக் கற்பதன் பயன்கள் பற்றிய தகவல்களினூடாக பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| **மூலாதாரம்** | **எழுதப்பட்ட காலம்** | **நூலாசிரியர்** |
|---|---|---|
| …………………………….. | கி.பி 4 ஆம் நூற்றாண்டு | கண்டறியப்படவில்லை |
| மகாவம்சம் | …………………………….. | …………………………….. |

(03 புள்ளி.)

(ii) புதிய கற்கால மனிதன் பயிரிடப்பட்ட தானியவகைகள் 4 தருக. (04 புள்ளி.)

(iii) பழைய கற்கால மனிதனின் வாழ்க்கைக் கோலத்தில் தெளிவாக தெரியும் பண்புகள் 4 தருக.(04 புள்ளி.)

03. (i) மொசப்பதேமிய மக்கள் தெய்வங்களாகக் கருதப்பட்டு வணங்கிய இயற்கை பொருட்கள் 3 தருக. (03 பு.)

(ii) பின்வரும் நிர்மாணங்களுக்குரிய நாகரிகங்களை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து அட்டவணையை பூரணப்படுத்துக.

| **நிர்மாணிப்பு** | **நாகரிகம்** |
|---|---|
| ஆப்பு எழுத்து | ……………………………………. |
| நெபநெபவுட்டேன் அரசி | ……………………………………. |
| மிருக அடையாளம் கொண்ட களிமண் தட்டு | ……………………………………. |
| துட்டகாமன் மன்னனின் தங்கத்திலாக முகமூடி | ……………………………………. |

(04 புள்ளி.)

(iii) மொசப்பதேமிய சமூகத்தின் 4 பிரிவுகளையும் குறிப்பிடுக.

(04 புள்ளி.)

04. (i) இலங்கையில் முதன்முதலில் குடியேறிய மக்கள் உணவுக்காக பெற்றுக் கொண்ட உணவுகளுள்,

A - தாவர உணவுகள் இரண்டு

B - விலங்குணவுகள் ஒன்று வீதம் குறிப்பிடுக. (03 புள்ளி.)

(ii) பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

1. விஜயன் இந்நாட்டுக்கு வரும்பொழுது இயக்கர் குழுவினர் வாழ்ந்த இரண்டு நகரங்களைக் குறிப்பிடுக.

2. விஜயனின் இரண்டு குழந்தைகளின் பெயர்களை குறிப்பிடுக. (04 புள்ளி.)

(iii) பண்டுகாபய மன்னன் அநுராதபுர நகரை முன்னேற்றமடையச் செய்வதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் நான்கு தருக. (04 புள்ளி.)

05. (i) மகிந்த தேரருடன் இந்நாட்டுக்கு வருகை தந்த மூன்று தேரர்களை பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) பின்வரும் மன்னர்கள் கட்டிய குளங்கள் கால்வாய்கள் எவை என்பதை அருகிலுள்ள அட்டவணையில் காணப்படும் இடைவெளிகளில் எழுதிப்பூரணப்படுத்துக

தாதுசேன மன்னன், வசப மன்னன், மகாசேன மன்னன், தேவநம்பிய திஸ்ஸ மன்னன்

| குளங்கள் மற்றும் கால்வாய்கள் | கட்டிய மன்னர்கள் |
|---|---|
| 1. ஹுருளுவாவி | ………………………………………… |
| 2. எலஹரக் கால்வாய் | ………………………………………… |
| 3. திஸா வாவி | ………………………………………… |
| 4. யோத வாவி | ………………………………………… |

(04 புள்ளி.)

(iii) எல்லாள மன்னனை யுத்தத்தில் தோற்கடிக்கச் செய்வதற்கு துட்டைகைமுனு மன்னனுக்கு உதவி புரிந்த சேனாதிபதிகள் நால்வரை குறிப்பிடுக. (04 புள்ளி.)

06. (i) மகாசேன மன்னன் நிறுவப்பட்ட மூன்று விகாரைகளை குறிப்பிடுக. (03 புள்ளி.)

(ii) பின்வரும் நிகழ்வுகளுக்குரிய மன்னர்களின் பெயர்களை தருக.

A - வல்லிபுரம் செப்பு சாசனத்தை உருவாக்கியவரும், யாழ்ப்பாணப் பிரதேசத்தின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு இசிகிரி அமைச்சரை நியமித்தலும்

B - திரீபீடகத்தை நூலுருவாக்கம் செய்தல்


C - எல்லாள மன்னனின் கல்லறை வழியாகச் செல்லும் போது அதற்கு மரியாதை செலுத்தும்படி கட்டளை பிறப்பித்த மன்னன்.

D - வெள்ளரச மரக்கிளையை இந்நாட்டுக்கு கொண்டு வந்து இதனை நாட்டுவதற்கு நடவடிக்கை எடுத்த மன்னன். (04 புள்ளி.)

(iii) துட்டைகைமுனு மன்னனின் சேவைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (04 புள்ளி.)

07. (i) வேட்டை யுகத்தில் மேற்கொள்ளப்பட்ட மரணச்சடங்கு முறைகள் மூன்றினை குறிப்பிடுக. (03 புள்ளி.)

(ii) பின்வரும் அடைப்புக்களிலுள்ள இடைவெளிகளை உரிய சொற்களை கொண்டு நிரப்புக.




(04 புள்ளி.)

(iii) பின்வரும் நிரல் A யிலுள்ள தகவல்களை நிரல் B யுடன் பொருத்தும் வகையில் இணைக்கவும்.

| **நிரல்** A | **நிரல்** B |
|---|---|
| 1. துட்டைகைமுனு மன்னனின் சகோதரன் | A. அனுலா தேவி |
| 2. முதலாவது பிக்குணி | B. புத்தபெருமானின் தாது |
| 3. ஜேதவனராமய தூபி | C. பிராமண தீசன் பஞ்சம் |
| 4. வலகம்பாகு மன்னன் | D. சத்தாதிஸ்ஸ |

(04 புள்ளி.)